# கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

புதிய வருடம் பிறக்கின்றது "புதிதாய் வாழ்வோம்" என்று புது வருடத்தில் வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கடந்த வருடம் கடந்து போகின்றது. அதில் பல அனுபவங்களை பெற்றிருக்கின்றோம். அந்த அனுபவங்கள் வாழ்வின் படிக்கற்களாக இருந்தன. சந்தோசமான அனுபவங்களும், துக்கமான அனுபவங்களும் கடந்த வருடத்தில் வந்து போயின. ஆனால் எல்லா அனுபவங்களும் எமது வாழ்வை புடமிட்டு மிகவும் சிறப்பானதாக மாற்றியது என்பது தெளிவு. நாங்கள் இறைவன் தந்த சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்தியிருக்கின்றோமா? அல்லது வீணடித்திருக்கின்றோமா? என்று ஆராய வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. எமது வாழ்வின் முன்னேற்றத்திற்காக இறைவன் பல சந்தர்ப்பங்களை தந்திருக்கின்றார். அதை எமது ஆற்றல்கள், திறமைகளுடாக பயன்படத்தி இறையரசைப் பரப்ப முயற்சி எடுத்திருக்கின்றோமா? என்று ஆழமாக சிந்திக்க வேண்டும். தரப்பட்டிருக்கும் 2017ம் ஆண்டு எங்களுடைய வாழ்வில் இறைமகன் இயேசுவை ஏற்று சிறப்பாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்றும், அடுத்ததாக 2017ம் ஆண்டு எமது ஆலயம் வாங்கி 10வது வருடத்தையும் நினைவு கூருகின்றோம். 10வருடங்கள் இறைவன் எம்மை ஒரே குடும்பமாக உருவாக்கி பாதுகாத்து வந்திருக்கின்றார். நாம் சிறப்பாக கத்தோலிக்க விசுவாசத்தில் வாழ்ந்திருக்கின்றோம் என்பதற்கு இவ்வாலயம் சிறந்த ஒரு எடுத்துக்காட்டு. புலம் பெயர் மக்கள் என்ற ரீதியில் எமக்கென்று ஒரு ஆலயம் இருப்பதுதான் எமது முயற்சியும், கடின உழைப்பும், ஒற்றுமையான செயற்பாடும் இவ்வாலயத்தை வேண்டுவதற்கு உறுதுணையாக இருந்தது. இதற்கு (மறைத்தள சிற்பி) அருட்தந்தை அன்றூா தவராஜசிங்கம் அரும் பங்காற்றியிருக்கின்றார் என்று சொன்னால் மிகையாகாது. அவரோடு சேர்ந்து எம் பங்குமக்கள் எல்லோரும் கடுமையான பங்களிப்பு குறிப்பாக பண உதவி, உடலுழைப்பு, பொருளுதவிகள் போன்றவை செய்திருக்கின்றார்கள் என்றால் பாராட்டப்பட வேண்டிய விடயம். இன்னும் கடந்த நான்கு வருடங்களாக பணியாற்றிய அருட்தந்தை யூட் அமலதாஸ் அடிகளாரையும் மறக்கமுடியாது. மிகவும் சிறப்பான முறையில் எமது பங்கை வழிநடத்தி விசுவாசத்தில் உறுதிபெற உழைத்திருக்கின்றார். அவரோடு சேர்ந்து பல பணிக்குழுக்களும் கடுமையாக உழைத்திருக்கின்றார்கள். இவ்வாலயத்தை (மீட்பின் அன்னை மறைத்தளம்) எமக்குத் தந்து எம்மை வழிநடத்தும் இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்து அவர் புகழை மகிமைப்படுத்துவோம். இவ்வாலயத்தை சிறப்பான முறையில் பராமரிப்பதற்கு பலவழிகளில் உதவி செய்துவருகின்ற ஒவ்வொரு பங்கு மக்களுக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும். ஒரு ஆலயம் இறை விசுவாசத்தின் வெளிப்படையான அடையாளம். "ஆலயம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி ஆலயம் தான் எம்மை இறைவனிடம் கூட்டிச் செல்லும் பாதையாய் இருக்கின்றது. நாம் அனைவரும் ஒற்றுமையாக, எமது ஆலயம் நாம் பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற உற்சாகத்தில் வளர வேண்டும். பலரின் உழைப்புக்கள் ஒன்றாக சேரும்பொழுது இறையரசு வளருகின்றது. இறை அன்பில் நாம் வளர்வோம். இவ்வருடம் பத்திமா மாதாவின் 100வது ஆண்டு நிறைவு. அதாவது பத்திமா பதியில் மரியன்னை மூன்று சிறுவர்களுக்கு காட்சி கொடுத்து 100வது ஆண்டு நிறைவு. 1917ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி தொடக்கம் 1917 ஐப்பசி 13ம் திகதி வரையும் லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ என்கின்ற சிறுவர்களுக்கு மனமாற்றத்திற்காக மன்றாடும்படியாக கேட்டுக்கொண்டார். இவ்வாண்டு பத்திமா அன்னையின் விசேட பரிந்துரைக்காகவும் நாம் மன்றாடக் கடமைப்பட்டுள்ளோம். செபமாலை ஓதும்படியாகவும், "பாவிகள் மனந்திரும்ப செப, தப, முற்சிகளை மேற்கொள்ள வேண்டும்" என்று மரியன்னை அறிவுறுத்துகின்றாள். இறுதியில் தமது மாசற்ற இதயம் வெற்றி பெறும் என்று மொழிந்தார். எனவே பாத்திமா அன்னையிடத்தில் எம்மை முழுதும் ஒப்புக்கொடுத்து இந்த வருடம் முழுவதும் அந்த அன்னையின் பரிந்துரையை வேண்டிநிற்போம்.

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
**Parish Priest**
**Our Lady of Deliverance Tamil Catholic Mission**
**Montreal (QC), Canada.**